**தேதி :** 25.08.2025 **SC.No. :** 392/2023 PW :7 மருத்துவர்.முத்துலட்சுமி

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u> –**

என்னிடம் காண்பிக்கப்படும் சா.சா.ஆ.1 தான் காயம்பட்ட இராமசாமி என்பவருக்கு கொடுக்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> –**

திருநெல்வேலி மருத்துவமனையில் நான்கு காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு ஸ்கேன் மூளைப்பகுதி, நெஞ்சுப்பகுதி, முகஎலும்பு பகுதிகள், வயிற்று பகுதி எடுக்கப்பட்டது. முகத்தில் காயம் இருக்கும் போது, காயம்பட்டவரால் பேச முடியாது என்றால் சிறிய காயம் என்றால் பேசலாம். மேக்சலரின் போனில் காயம் இருந்தால் பேச முடியாது என்றால் காயம்பட்டவருக்கு நான் சிகிச்சை வழங்காததினால் அது பற்றி கருத்து கூற முடியாது. நான் ஆய்வாளர் விசாரணையில் முக எலும்பு உடைந்திருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய கருத்துரு தவறானது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:11:35 +0530